


இந்தியப் படை எமது மண்ணை ஆக்கிரமித்து பல அழிவுகளை செய்துகொண்டிருந்த காலம். வீதிகள் ஒழுங்கைகள் எங்கு பார்த்தாலும் வெறி நாய்களின் வேட்டை. அமைதிப்படை என்று வந்து குழந்தைகள், பெண்கள் என்ற வேறுபாடு இன்றி தமிழீழ மண்ணை அழித்து அட்டகாசம் செய்து கொண்டிருந்த காலம். எமது மக்களை காக்க என்று சொல்லி இந்த மண்ணுக்கு வந்தவர்கள் எமது மக்களையும் கலை, பண்பாட்டையும் அழிப்பதைக் கண்டு சிறுவர் முதல் பெண்கள் வரை எமது மண்ணைக் காக்க எழுந்தனர்.

சிறு வயதில் இருந்தே எந்தக் காரியத்தையும் துடுக்குடன் செய்யும் கிருஸ்ணவரதன் என்ற இயற்பெயர் கொண்ட இவன், கடலால் சூழப்பட்ட வல்வெட்டித்துறையில் ஆதிகோவிலடி என்னும் கிராமத்தில் சேதுலிங்கம் வள்ளியம்மா தம்பதிகளின் மூத்த மகனாக 10. 09. 1972 இல் பிறந்தான்.

இவன் 17. 01. 1989 இல் விடுதலைப் புலிகளுடன் தன்னை ஒரு முழுநேர உறுப்பினராக இணைத்துக் கொண்டான். விடுதலைப் புலிகளின் பாசறையாக பல விடுதலைப் புலிகளை இந்த மண்ணில் உருவாக்கிவிட்ட மணலாறு பயிற்சி முகாமில், பயிற்சி எடுப்பதற்காக அனுப்பப்பட்டான்.

இங்கு 'திலக்' என்ற பெயருடன் பயிற்சியை தொடங்கிய இவன் பயிற்சியில் மிகவும் கட்டுப்பாட்டுடனும், திறமையுடனும் நடந்து கொண்டான். இதனால் பல தடவைகள் முகாம் பொறுப்பாளராலும், பயிற்சி அளித்த ஆசிரியர்களாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டு வந்தான்.

எந்த வேலையைக் கொடுத்தாலும் முக மலர்வுடன் ஏற்று அதைச் செய்து முடிப்பதில் இவனுக்கு நிகர் இவனே தான். காட்டுப்பகுதியில் உணவுப் பொருட்களில் இருந்து சகல விதமான பொருட்களையும், தலையில் சுமந்தே செல்ல வேண்டிய நிலை. தூர இடங்களில் இருந்து பொருட்களை எடுத்து வருவதானால் பொறுப்பாளரால் தெரிவு செய்யப்படும் குழு திலக்கின் குழுவாகவே இருக்கும்.

அவன், தான் சோர்வின்றி தனது குழுவில் உள்ளவர்களை எல்லாம் பாட்டாலும், பகிடிப் பேச்சாலும் சிரிக்க வைத்து வேலைகளை களைப்பின்றிச் செய்யும் திறமையுடையவன். பயிற்சி முகாமில் நடைபெறுகின்ற கலை நிகழ்ச்சிகளில் திலக் இல்லாமல் இருக்காது. ஏதாவது ஒரு நிகழ்ச்சியிலேனும் அவன் பங்கு இருக்கும். அப்படி இல்லாவிட்டால் சக போராளிகள் கட்டாயப்படுத்தி "திலக் அண்ணை மேடையில் ஏறுங்கோ. ஒரு பாட்டென்றாலும் கட்டாயம் பாட வேண்டும்" என்பார்கள். அவர்களின் அன்புக் காகப் பாடுவான்.

இவனுடைய ஒவ்வொரு அசைவும், பேச்சும் ஒரு முழுமையான விடுதலைப் போராளிக்கு உரியனவாகவே இருக்கும். எப்போ எடுத்தாலும் தனது குழுவில் உள்ளவர்களிடம், "மச்சான் சண்டை பிடிக்க வேணும், ஆமிக்கு நாம் யார் என்று காட்ட வேணும்" என்று பேசிக்கொள்வான்.

பயிற்சிக் காலத்தில் இப்படி விடுதலை உணர்வுடன் இருந்து திலக் பயிற்சியை முடித்து வெளியே வந்தான். 'எமது வெற்றிக்கு கடுமையான பயிற்சியும் மனவுறுதியும் தான் காரணம்' என்ற தலைவரின் கூற்றுக்கு அமைய, மேலும் பயிற்சி எடுக்க விரும்பிய இவனை, வயதில் சிறுவனாக இருந்தாலும் பயிற்சியின்போது காட்டிய திறமையையும், ஆர்வத்தையும் கண்டு மேலதிக பயிற்சிக்கும் இவன் அனுப்பிவைக்கப்பட்டான். அங்கும் இவன் முதன்மை மாணவனாக இருந்து பலபேரின் பாராட்டைப் பெற்றான்.

இப் பயிற்சியை முடித்து வெளியே வந்த நேரத்தில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானது.. இதனைத் தொடர்ந்து இன அழிப்பில் ஈடுபட்டு வந்த சிங்கள வெறியர்களின் முகாம்களை அழித்திட விடுதலைப் புலிகள் செயற்பட்டு வந்தனர். இதன் முதல்படியாக கொண்டச்சி படைமுகாம் தகர்ப்பு இடம் பெற்றது. இத்தாக்குதலில் திலக்கின் பங்கு அளப்பரியது. தாக்குதல் தொடங்கியது. ஒரு பக்கமாக நின்ற திலக் நின்ற அணி எதிரியின் முகாமுக்குள் புகுந்து அவனை அழிக்க வேண்டும், என்ற ஆதங்கத்தில் அவர்களது கரங்களில் இருந்த துப்பாக்கி நெருப்பைக் கக்கிய வண்ணம் முன்னேறிச் சென்றது. திலக்கின் துப்பாக்கி மின்னலாக சுழன்றது. அதில் எதிரிகள் பலர் கண் முன்னே விழுந்தனர். முதலாவதாக இவன் சென்ற அணியே முகாமுக்குள் புகுந்தது. பல ஆயுதங்களுடன் 'பவள்' கவச வாகனம் ஒன்றும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பரந்தன் பக்கமாக முன்னேற முயன்ற படையினர் மீது கடும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதில் இவன் காட்டிய வீரம் இவனோடு களம் சென்ற அனைத்துப் போராளிகளையும் ஒரு கணம் சிந்திக்க வைத்தது. சண்டை முடிந்து முகாம் திரும்பியதும் இங்கு வராமல் தொடர்ந்து சண்டை செய்து கொண்டிருந்திருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டே இருந்தான்.

சண்டைகளில் இவன் காட்டிய வீரமும் துணிச்சலும் எல்லோரையும் இவன் பக்கம் ஈர்த்தது. எல்லோருக்கும் முன் உதாரணமாக திலக் செயற்பட்டான். சண்டைக்கு போராளிகளை தெரிவு செய்யும் போது இவன் பெயர் இடம்பெறாவிட்டால், எதற்கும் முகம் சுளிக்காத இவன், முகம் சுளிப்பான். யாருடனும் பேசமாட்டான்.

"இவ்வளவு பேரும் சண்டைக்கு போக நான் மட்டும் இங்கு நிற்பதா" என்று கூறிக் கொள்வான். இவனின் இந்த மாறுதலைப் பார்த்து இவனும் சண்டை அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவான். இப்படித்தான் கொக்காவில் முகாம் தாக்குதலுக்கு சென்ற அணியில் இவன் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

அங்கும் இவன் காட்டிய வீரம், எல்லோரும் இவன் போலவே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை எல்லோரிடமும் தோற்றுவித்தது. வீரத்திலும் விவேகத்திலும் இலட்சியத்திலும் இவன் எப்படி இவ்வளவு திறன் பெற்றான்? அதுதான் ஒவ்வொரு போராளியையும் தனது பிள்ளையாக வளர்க்கும் தலைவனின் கண்காணிப்பில் வளரும் விடுதலைப் புலிகளின் திறன்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மண்ணை ஏனைய பிரதேசங்களுடன் பிரித்து நிற்கும் 'ஆனையிறவு முகாம் முற்றுகை' ஆரம்பமானது. முற்றுகையின் முதல் கட்டமாக ஆனையிறவு உல்லாச விடுதி மினி முகாம் விடுதலைப் புலிகளின் சில நிமிட தாக்குதலில் அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் திலக் காட்டிய வீரமும் விவேகமும் இவனுக்கே உரியது. சில நிமிட நேரத்தில் முகாம் வீழ்ச்சி அடைந்தது என்றால், அதில் சென்ற அணிகள் எவ்வளவு வேகத்தில் தாக்கியிருப்பார்கள். இதனால் முகாமுக்குள் இருந்த எதிரிகள் பயப்பீதியால் ஆட்டம் கண்டார்கள். தமது உயிர் திரும்பாது என்னும் முடிவுக்கு வந்தனர்.


லெப்டினன்ட் திலக்

தமக்கு உதவி செய்யும்படி படையினர், படைத்தளபதிகளிடம் உயிர்ப்பிச்சை வேண்டினர். இதன் காரணமாக முற்றுகையை முறியடிக்க வென்று கட்டைக்காட்டுப் பகுதியில் இராணுவம் தரையிறக்கப்பட்டது. 24 மணிநேரத்தில் முற்றுகையை முறியடிப்பதாகக் கூறிக் கொண்ட படையினர் 24 நாட்களுக்கு மேல் போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

கடற்படைக் கப்பல்கள் மூலம் தரையிறக்கப்பட்ட படையினரை எதிர் கொள்ள போராளிகள் கட்டைக்காட்டுப் பகுதியை நோக்கி விரைந்தனர். மூண்டது கட்டைக்காட்டுப் போர்.

உல்லாச விடுதிப் பகுதியில் சண்டையில் நின்ற திலக், கட்டைக் காட்டுக்கு செல்ல விருப்பம் கொண்டு பொறுப்பாளரிடம் கேட்ட பொழுது, இவன் ஆர்வத்தைக் கண்ட அவர் அங்கு சென்ற அணியுடன் இவனையும் அனுப்பி வைத்தார். அங்குலம் அங்குலமாக முன்னேறி வந்த படையினர் இவர்களின் கடும் எதிர்ப்பைக் கண்டு திணறினர்.

'போருக்கெல்லாம் தாய்ப்போர்' என்று கொக்கரித்தான் எதிரி. இலங்கையில் இரண்டு இராணுவங்கள் உண்டு என்று கூறும் அளவுக்கு திலக் போன்ற நிகரில்லாத வீரர்கள் போரிட்டார்கள். படையினர் முன்னேறிக் கொண்டு இருந்த நேரத்தில் இடையில் உட்சென்று தாக்குவதற்காக ஓர் அணி தெரிவு செய்யப்பட்டது. அத் தாக்குதலில் திலக்கும் இடம் பெற்றான்.

உட்சென்று தாக்கும் தாக்குதல் தொடங்கியதும் போராளிகளின் ஆயுதங்கள் தீப்பிழம்பாக உட்புகுந்தன. எதிரி திசை தெரியாமல் ஓடினான். எம்மவர்களின் குண்டுகள் எதிரியைச் சல்லடை போட்டன. பல படையினர் கொல்லப்பட்டு பல நவீனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் படையினரின் உடல்களும் கைப்பற்றப்பட்டன. இதில் திலக் காட்டிய வீரம் இன்றும் போராளிகள் மத்தியில் பேசப்படுகின்றது. இச் சண்டையின் பின்னரும் முன்னேறி வந்த படையினருக்கு எதிராக தொடர்ந்தும் போராடினான். 22. 07. 1991 அன்றும் தொடர்ந்து நடைபெற்ற மோதலில் எதிரியின் ரவை பட்டு வீரமரணத்தைத் தழுவிக் கொண்டான்.

இவன் கண்ட கனவை நனவாக்க இவன் சிந்திய செங்குருதியில் சிவந்த மண்ணில் செங்கொடியை ஏற்றி ஆயிரமாயிரம் விடுதலை வேங்கைகள் உருவாகிக் கொண்டே உள்ளனர். வீரத்துக்கு உதாரணமான இந்த வீரனின் நினைவுகளும் அனைத்துப் போராளிகளின் இலட்சிய உணர்வுகளும் என்றும் எம்மோடு தொடர்ந்து வரும். ■